KINCHITKARAM DHARMA SAMSTHAPANAM

# பழங்கலைகளில் ராமாயணம்






**வெளியிடுவோர்:**

**கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்**

**Phone : 7598417682, 9790531919**

**Email : kinchitdharmam@gmail.com**





அண்டர் நம் துயரம் தீர
அயோத்தி மாநகரில் வந்து
தண்டகாரண்யம் சென்று
சமுத்திரம் மீது
அணையைக் கட்டி
கொண்ட ராவணனை மாட்டக்
கோதண்டம் கையிலேந்தி
புண்டரீகக் கண்ணன் ராமன்
பொன்னடிக் கமலம் போற்றி !!!




பாரத பூமி, பழம்பெரும் பூமி, புண்ணிய பூமி! அப்படிப்பட்ட பாரத தேசத்தின் இரு பெரும் காப்பியங்கள் ராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகும். வால்மீகி மகரிஷியால் இயற்றப்பட்ட ராமாயணத்தை ஆதிகாவியம் மற்றும் மகாகாவியம் என்றே அழைக்கின்றனர். உலக இலக்கியங்களிலும், ராமாயணம் மிகப்பெரிய இதிகாசமாக விளங்குகிறது

இப்படிப்பட்ட
ஆதிகாவியமான
ராமாயணம் நமது நாட்டில்
மட்டுமல்ல, உலகின் பல
பாகங்களிலும்
கொண்டாடப்படுகிறது.
குறிப்பாக, நம் நாட்டில்,
கதை வடிவமாக
மட்டுமின்றி ஆடல் பாடல்
என்று பல கலை
வடிவங்களிலும்
கொண்டாடப்படுகிறது.







கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்



ராமாயணம்
நகர்ப்புறங்களில்
பரதநாட்டியம், கதகளி,
மேடைப்பேச்சு, பட்டிமன்றம்
என்று இருக்க; நமது
கிராமங்களில்
தெருக்கூத்து,
கழைக்கூத்து,
வில்லுப்பாட்டு, கிராமிய
பாடல்கள், நாட்டிய நாடகம்
என்று பல வடிவங்களில்
ராமாயணத்தை
சித்தரிக்கின்றனர்.






இவை மட்டுமின்றி, நாம் அறியாத சில சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளும் கிராமங்களில் வழக்கத்தில் உள்ளது.

ஒவ்வொன்றாக பார்ப்போம்...

இப்படி, ராமாயணம் சித்தரிக்கப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளை 3 விதமாக பிரித்துப் பார்க்கலாம்:

காஞ்சித…ரம் தர்மஸம்ஸ்தாபநம்



1. நாட்டுப்புற வழக்கு



2. கலை வடிவம்



3. இலக்கியம்

# நாட்டுப்புற வழக்கு



**ராமாயண ஏடு வாசிப்பு - தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கோவில்களில் ராமாயண ஏடு வாசிப்பு என்ற நிகழ்ச்சி உள்ளது.**



கிஞ்சித்காரம் தர்மஸ்தாபநம்

**இன்றளவும் ஆடி மாதம் முழுவதும் தினசரி இரவு ராமாயண ஏடு வாசிப்பு நிகழ்கிறது. அதே போல், கேரளத்தில், ஆடி மாதம் முழுவதும் ராமாயண வாசிப்பு உண்டு; இந்த மாதத்தையே ராமாயண மாதம் என்றே அழைப்பர்.**

# ராமாயண மாதம்

**கேரளத்தில், ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் தோறும் ராமாயணம் வாசிக்கும் வழக்கம் இன்றுவரை நடந்து வந்துள்ளது. மலையாளத்தில் கற்கடக மாதம், அதாவது, அவர்களின் பஞ்சாங்கத்தின் படி இதுவே கடைசி மாதம்.**




**எந்த பஞ்சம் பசி பட்டினி அவர்களை பீடிக்கக் கூடாது என வேண்டி ராமாயணத்தை வாசிக்கிறார்கள். மலையாளத்தில் பிரபலமாக துஞ்சத் எழுதச்சன் எழுதிய "அத்யாத்ம ராமாயண கிளிப்பாட்டு" கொண்டு தான் ராமாயண வாசிப்பு நடக்கிறது.**

# கிராமிய பாடல்



கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

**பத்துத்தலை ராவணனை ஒத்தத்**
**தலை ராமன்**
**வென்றான் சத்தியமா**
**சொல்லுறேன்டா**
**சுடலை மாடா, இந்த சத்தியத்தை**
**ஒத்துக்காம வித்தைகளை**
**கத்துக்காம வெல்லுவது எப்படிடா**
**சுடலை மாடா**

— என்ற ஒரு நாட்டார் வழக்குப்பாடல் மதுரைப்புர கிராமங்களில் வழக்கிலுள்ளது.

**கலை வடிவம்** **பரதநாட்டியம்**

நம் தமிழ்நாட்டின் முக்கிய நடன கலையான பரதநாட்டியத்தில், ராமாயணம் சித்தரித்துக் காட்டப்படுகிறது. பல அமைப்புகளில் முழுநீள நடன-நாடகமாக “பால ராமாயணம்” இயக்கப்படுகிறது



ஶ்ரீராமரின் அவதாரம் தொடங்கி சீதா கல்யாணம் வரை, குறிப்பாக, புத்ரகாமேஷ்டி யாகம், தாடகை வதம், அஹல்யாவின் சாபவிமோசனம், என்று மிக கூர்மையாக கவனித்து எடுக்கப்பட்டுள்ளது.

# கதகளி



**கேரள நாட்டியமான கதகளியில் கூட ராமாயணத்தில் இருந்து சில பகுதிகள் காட்டப்படுகிறது. குறிப்பாக, கர்கிடக மாசத்தில், பிரபலமாக நடக்கும்.**



கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

**சொல்லப் போனால், கதகளியின் ஆரம்பமே**

## “ராமநாட்டம்”

**என்று சொல்லப்படும் ராமாயண நடனத்தில் இருந்து தான் வந்தது என்றும் சொல்கிறார்கள்.**

# கர்நாடக இசை



கர்நாடக இசையைப் பொறுத்தவரை தியாகராஜ சுவாமிகளின் ராமர் மீதான பாடல்கள் எல்லோரும் அறிந்ததே.



பல சங்கீத வித்வான்கள் பாடிய “நாம ராமாயணம்” முழு ராமயணத்தையே பாட்டு வடிவில் கூறுகிறது.

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்



கிராமப்புறங்களில் கதை வடிவாகவும் அன்றாட வாழ்விலும் வழக்கிலும் இருந்தால் கூட, ராமாயணம் கலை வடிவில் காட்டப்படும்பொழுது மக்களை வெகுவிரைவில் எளிதாகவும் சென்றடைகிறது.

இசையோடு சேர்த்து கதையைச் சொல்லுவது தான் வில்லுப்பாட்டு. பாடும் பாடல்கள் மிக எளிமையான வார்த்தைகள் மற்றும் இசையைக் கொண்டு அமைக்கப்படுகிறது.




## வில்லுப்பாட்டு




சுப்பு ஆறுமுகம் அவர்களின் வில்லுப்பாட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த வைகுண்டம் அய்யாவின் வில்லுப்பாட்டு, நாராயணதாஸ் வில்லுப்பாட்டு இவற்றின் ராமாயண காவியம் கிராமபுறங்களில் இன்றளவும் கோவில் திருவிழாக்களில் பெருவாரியாக நடத்தப்படுகின்றன.

# தெருக்கூத்து

தெருக்கூத்து என்றவுடன் நம் மனத்திரையில் சில காட்சிகள் விரியும். சற்று வெளிறிப்போன துணிகளை அணிந்து அரிதாரம் பூசிக்கொண்டு கலைஞர்கள் கம்பீரமான குரலில் நாட்டுப்புறக் கதைகள், ராமாயணம், மகாபாரதக் கதைகளைக் கூத்தாக நிகழ்த்திக்கொண்டிருப்பர்.

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்






அதற்கென தனி ரசிகப் பட்டாளங்களும் உண்டு. கேரளத்தின் கதகளியை ஒட்டி முகஒப்பனை செய்து ராமாயணத்தில் இருந்து சில காட்சிகளை எடுத்து, கிராம மக்களுக்கு ஏற்றாற்போல் வசனங்களை எளிமைப்படுத்தி நாடகத்தை நடத்துவார்கள்.

## திருமலை ராயன்பட்டினம்

குறிப்பாக, காரைக்கால் மாவட்டத்தில் உள்ள திருமலை ராயன் பட்டினத்தில், வரதராஜப் பெருமாள் கோயில் உள்ளது.



திருக்கண்ணபுரம் சௌரிராஜன் பெருமாள் மாசி மாதம், வலைச்சேரி வழியாக செல்லும் போது மாசி மகம் உற்சவத்தை அங்கு கொண்டாடிவிட்டு இந்த வரதராஜப் பெருமாள் கோயிலில் தான் தங்கிவிட்டுச் செல்கிறார்.


கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

கோயில் பக்கத்தில் உள்ள பிரதானமான சாலையில் ஆண்டுதோறும் ராமாயணத்தில் இருந்து ஜடாயு மோக்ஷத்தை நாடகமாக நடத்திக் காட்டுகிறார்கள். இது ரொம்ப காலத்திலிருந்தே தவறாமல் இன்றும் நடந்து வருகிறது.



# ராமர் தாலாட்டுப் பாட்டு

**தாலாட்டுப் பாடல்களில் ராமர் தாலாட்டு என்பது மிக முக்கியமான இடம் பெறுகிறது.**




**நெல்லையப்புரம் ஜெகந்நாதன்-தனசீலன் அவர்களின் ராமர் தாலாட்டு, அரியபுரம் செந்தில்குமார் (6வது தலை முறை ) நாட்டைச் சேர்ந்த வள்ளியம்மை , இவர்களின் ராமர் தாலாட்டுப் பாடல்கள் கிராமப்புற திருவிழாக்களில் இசைக்கப்படுகின்றன.**

# ராமாயண நாடகம்

அருணாச்சல கவிராயரின் ராம நாடகம் கம்பராமாயணத்திற்கு அடுத்தபடியாக மிகப் பிரசித்தம்! சொல்லப்போனால், ஜனங்களுக்கு மிகவும் எளிதாக, ஜனரஞ்சகமாக இருப்பதால் கம்பராமாயணத்தை விடவும் முதல் ஸ்தானம் பெறுகிறது.


கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்

**இது தவிர சூலமங்கலம் சகோதரிகளின் நாட்டிய நாடகம், ராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரையை ஒட்டிய கிராமங்களில் வள்ளித்திருமணம் போன்று ராமாயண ராம நாடகம் நடை பெ றுகிறது**

# இலக்கியம்



தமிழ் இலக்கியத்தை பொறுத்தமட்டிலும், ராமரைப் பற்றி பேசாத நூல்களே இல்லை எனலாம். தமிழ் இலக்கியங்களில் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு முன்னதாகவே , ராமாயணம் தமிழ் இலக்கியங்களில் புகழ்பெற்று இருக்கிறது:.

இவை மட்டுமின்றி பழம்பெரும் தமிழ் இலக்கியங்களான அகநானூறு புறநானூறு போன்றவற்றில் கூட ராமாயண கதாபாத்திரங்கள் பற்றிய சொல்லாடல் காணப்படுகிறது. இது போன்று, சிலப்பதிகாரத்திலும் கூட கோவலன் கண்ணகி காட்சிகள் வரும்பொழுது ராமர் சீதைப் பற்றிய வர்ணனைகள் உள்ளன

கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபநம்




சங்க இலக்கியங்கள் அகநானூறு (400 BC), புறநானூறு (300 BC), சிலப்பதிகாரம் (2ம் நூற்றாண்டு), ஆழ்வார்களும் , நாயன்மார்களும் தங்களின் பாசுரங்களில் ராமரைப் பற்றி குறிப்பிட்டுள்ளனர்.

# இவையெல்லாவற்றையும் மிஞ்சியது கம்ப ராமாயணம்!!!




வால்மீகி இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டது. இன்றும் கம்பன் கழகம், கம்பராமாயண பட்டிமன்றங்கள் நடைபெறாத இடங்களே இல்லை என்றே கூறலாம். பண்டிகைகள் என்றாலும் சரி, கிராமத் திருவிழாவாக இருந்தாலும் சரி, அங்கு கட்டாயமாக கம்பராமாயண பட்டிமன்றம் இடம்பெறும்.



இவை தவிர 4, 5 நூற்றாண்டுகளாகவே தமிழகத்தின் நகர்புற , கிராமப்புற மக்களிடையே ராமன், ராமசுப்பு, ராமசாமி, ராமச்சந்திரன் என்றும் சீதை , மைதிலி, ஜானகி என்றும் பெயர் வைக்கும் பழக்கம் இருந்து வருகிறது. இப்படி எல்லா விதத்திலும் நமது அன்றாட வாழ்விலும் செயலிலும் ராமாயணமும் ராமாயண கதாபாத்திரங்களும் நம்மிடையே தவிர்க்க முடியாத ஒன்றாக கலந்து விட்டது என்பதே உண்மை !!!

குறிப்பு:
மேலுள்ள தகவல்கள் அனைத்தும் கிஞ்சித்காரம் தர்மஸம்ஸ்தாபனத்தின் சேவகர்களால் இணையதளத்திலிருந்து சேகரித்து எழுதப்பட்ட ஒரு முயற்சி.

- (https://www.thehindu.com/features/friday-review/theatre/Poignant-narratives/article14576094.ece)
- (https://archive.org/details/pli.ccrt.Ramayana)
- (https://www.sridevinrithyalaya.com/balaramayanam)
- (https://www.hindu-blog.com/2008/06/ramayana-masam-reading-of-epic-ramayan.html)
- (https://www.maalaimalar.com/news/district/reading-of-ramayana-in-arumukaneri-487656)
- (https://www.indianculture.gov.in/seerkazhi-arunachala-kavirayar-and-rama-natakam)
- (https://www.thehindu.com/society/history-and-culture/the-making-of-rama-natakam/article26805 079.ece)



ஜெய் ஸ்ரீ ராம் !!!